02.06.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## ஜூன் 16, 17-ஆம் தேதிகளில் சிறு தானிய உற்பத்தி பயிற்சி

காட்டாங்கொளத்தூர் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் வருகிற 16, 17-ஆம் தேதிகளில் விவசாயிகளுக்கான சிறு தானிய உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து வேளாண் உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் பத்மாவதி கூறியதாவது:

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, சிறு தானியங்கள் உற்பத்தி செய்வது குறித்த தொழில்நுட்பப் பயிற்சி, பொத்தேரி காட்டுப்பாக்கம் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் வருகிற 16, 17-ஆம் தேதிகளில் அளிக்கப்பட்ட உள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள் வருகிற 10-ஆம் தேதிக்குள் மாவட்ட வேளாண் உழவர் பயிற்சி நிலைய அதிகாரிகளிடம் நேரிலோ அல்லது 99529 16247 என்ற செல்லிடப்பேசியிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

## வத்தலகுண்டு விவசாயிகள் பட்டறிவுப் பயணம்

திருவாரூர் மாவட்டத்தில் பட்டறிவு பயணம் மேற்கொண்ட விவசாயிகள் திங்கள்கிழமை வத்தலகுண்டு திரும்பினர்.

திருவாரூர் மாவட்டம் ஆதிரெங்கத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் தேசிய அளவிலான நெல் திருவிழா

நடைபெற்றது. திருவிழாவில், வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமைத் திட்டத்தின் கீழ் வத்தலகுண்டு விவசாயிகள் பட்டறிவு பயணத்தின் ஒரு பகுதியாக பங்கேற்றனர். இவ்விழாவில், இயற்கை வழியில் குறைவான செலவில் அதிக மகசூல் பெற்று லாபம் பெறுவது குறித்தும், மண்வள பாதுகாப்பு குறித்தும், நமது தமிழகத்தின் பாரம்பரிய நெல் சாகுபடியின் முக்கியத்துவம், பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் இயற்கை வேளாண் கண்காட்சியையும் கண்டறிந்தனர். மேலும் விழா நிறைவின் போது, வத்தலகுண்டு பகுதிகளில் பயிரிட பாரம்பரிய நெல் விதைகளும் வாங்கிக்கொண்டு திங்கள்கிழமை வத்தலகுண்டு திரும்பினர். இதற்கான ஏற்பாடுகளை வத்தலகுண்டு வட்டார அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் தெ.கார்த்திகா மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் ஐ.கண்ணன், பா.விக்னேஷ்வரி ஆகியோர் செய்திருந்தனர்.

**"பருத்தி விலையை மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும்'**

பருத்திக்கு விலை நிர்ணயம் செய்து பின்னலாடை, விசைத்தறி தொழிலை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவீரன் தீரன் சின்னமலை பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பேரவை செயற்குழுக் கூட்டம் திருப்பூரில் நடைபெற்றது. கூட்டத்துக்கு கொங்கு எம்.ராஜாமணி தலைமை வகித்தார். மாநிலத் தலைவர் வி.கே.முருகேசன், மாநில கௌரவத் தலைவர் கே.எம்.முருகேசன், மாநிலப் பொருளாளர் எஸ்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை ஆர்.கே.நகரில் இடைத்தேர்தலில் போட்டியிடும் அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு, பேரவையின் ஆதரவைத் தெரிவித்து, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாகவே அவிநாசி அத்திக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும்.

விவசாயிகள் பாதிப்படையாத வகையில் நிலம் கையக சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும். பருத்தி விலையை மத்திய அரசு நிர்ணயித்து, நலிவடைந்து வரும் பின்னலாடை தொழிலை பாதுகாக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் சிலை அமைக்கவும், அந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மகளிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தொடக்கம்**

சென்னிமலை ஒன்றியம், கவுண்டச்சிபாளையம் ஊராட்சி, புதுவலசு கிராமத்தில் மகளிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் திங்கள்கிழமை தொடங்கப்பட்டது.

ஈரோடு வேளாண் வணிக துணை இயக்குநர் ரா.சுப்பிரமணியன், நல்லெண்ணை விற்பனையை திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். சென்னிமலை வட்டார வேளாண் அதிகாரி (வேளாண் வணிகம்) சண்முகசுந்தரம் நிறுவனத்தின் நடவடிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினார்.

வேளாண் விற்பனை, வேளாண் வணிகத் துறையின் ஆலோசனையின்படி இந்நிறுவனம் செயல்படுகிறது. இந்த நிறுவனத்தில் 1000 உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு இதுவரை 300 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

விவசாயிகள், விவசாய உற்பத்தியில் உருவான பொருள்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்தல், வேளாண் வணிகம் செய்தல் ஆகியவற்றில்

கிடைக்கும் லாபத்தை அனைத்து உறுப்பினர்களுக்கும் பகிந்து கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்நிறுவனம் செயல்படுகிறது.

இதில், 10 பேர் கொண்ட குழு நிர்வாக இயக்குநர்களாக உள்ளனர்.

நிறுவனத்தில் முதல் கட்டமாக செக்கு மூலமாக நல்லெண்ணை உற்பத்தி செய்யப்பட்டது.

**கூடுதல் மகசூல் பெற மண் ஆய்வு அவசியம்**

கூடுதல் மகசூல் பெற விவசாயிகள் அவசியம் மண் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து, வேளாண் துறை அலுவலகம் சார்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பயிரின் மகசூல் மண்ணின் வளத்தையும், அதிலிருந்து கிடைக்கும் ஊட்டசத்தையும் பொருத்தே அமையும். எனவே, மண்ணின் வளத்தை அறிய மண் மாதிரி ஆய்வு செய்வது முக்கியமாகும்.மண்ணில் உள்ள தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை அறியவும், களர், அமில, உவர் தன்மைகளை அறிந்து உரிய சீர்திருத்தம் செய்யவும், தேவைக்கேற்ப உரமிட்டு உர செலவை குறைக்கவும், நிலத்தின் நிலையான வளத்தை பெருக்கிடவும் மண் ஆய்வு செய்ய வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு குறைந்தது 10 இடங்களில் மண்மாதிரி எடுக்க வேண்டும். ஆங்கில எழுத்து ஏ வடிவில் குறிப்பிட்ட ஆழத்தில் குழி வெட்டி இரு பக்கங்களிலும், மேலிருந்து கீழ்வரை ஒரே சீராக அரை அங்குல ஆழத்தில் மண்ணை வெட்டி எடுக்க வேண்டும்.

நெல், கடலை, கம்பு, மக்காச்சோளம் ஆகிய பயிர்களுக்கு 15 செ.மீ ஆழத்திலும், பருத்தி, கரும்பு, வாழை, மிளகாய், மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு 22.5 செ.மீ ஆழத்திலும், தென்னை, மா மற்றும் பழத்தோட்ட பயிர்களுக்கு 30, 60, 80 செ.மீ ஆழத்தில் மூன்று மண் மாதிரிகள் எடுக்க வேண்டும்.

சேகரிக்கப்பட்ட மண்ணை சீராக பரப்பி நான்கு சமபாகங்களாக பிரித்து, எதிர் மூலையில் இருபாகங்களிலும் உள்ள மண்ணை நீக்கி விடவும். மீண்டும் மண்ணை பரப்பி ஏற்கனவே செய்ததுபோல, நான்கு சம பாகங்களாக பிரித்து வேறு எதிர் மூலையில் உள்ள மண்ணை நீக்கி விடவும். பிரித்து சுமார் 1.2 கிலோ மண்ணை பாலித்தீன் பை அல்லது துணிப்பையில் கட்டி, விவசாயி பெயர், சர்வே எண், பயிரிடவுள்ள பயிர், பயிரிபட்ட பயிர் ஆகிய விவரத்தை குறிக்க வேண்டும்.

தழை, மணி, சாம்பல் சத்துக்கள் குறித்து விவரம் அறிய ரூ. 10, நுண்ணூட்ட சத்துக்கள் குறித்து விவரம் அறிய ரூ. 10, பாசன நீர் மாதிரி ஆய்வு செய்வதற்கு நீர் மாதிரி ஒன்றுக்கு ரூ. 20 வீதம் ஆய்வு கட்டணம் செலுத்த வேண்டும்.

நடமாடும் மண் ஆய்வுக் கூடத்தின் மூலம் ஈச்சங்காடு கிராமத்தில் செவ்வாய்க்கிழமை (ஜூன் 2) நாரணமங்கலத்திலும், 3 ஆம் தேதி, இரூர் மற்றும் பாடாலூரிலும், 4 ஆம் தேதி நாட்டார்மங்கலம், செட்டிக்குளத்திலும், 5 ஆம் தேதி மாவிலங்கை, கண்ணப்பாடி கிராமத்திலும், 6 ஆம் தேதி புது அம்மாபாளையம், டி.களத்தூரிலும் மண் மற்றும் நீர் மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

# இன்றைய வேளாண் செய்திகள்

## ஜூன் 5ல் துவங்குகிறது தென்மேற்கு பருவமழை

புதுடில்லி:தென்மேற்கு பருவமழை ஜூன் 5 லிருந்து துவங்குவதற்கான வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இதுகுறித்து வானிலை ஆய்வு மைய இயக்குனர் யாதவ் கூறுகையில், தென்மேற்கு பருவமழை குறித்து நடத்தப்பட்ட ஆய்வில்,. கேரளாவில் துவங்கும் பருவமழை, உடனடியாக வடமாநிலங்களுக்கு வராது. சிறிது தாமதமாக அங்கு வந்து சேரும் என்ற போதும் 5ம் தேதி முதல் பருவமழை துவங்க வாய்ப்பு அதிகம் என்றார்.

## தள்ளி போகிறது தென்மேற்கு பருவ மழை: வெப்ப சலனத்தால் தமிழகத்தில் மழை பெய்யும்



'நடப்பு ஆண்டில், இரு நாட்களுக்கு முன்னதாக துவங்கும் என, கணிக்கப்பட்ட தென்மேற்கு பருவ மழை, இம்மாதம், 5ம் தேதி தான் துவங்கும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. 'கேரள கடல் பகுதியில், தென்மேற்கு நோக்கி வீச வேண்டிய காற்று, வடமேற்கு

நோக்கி வீசுவதே காரணம்' என, 'ஸ்கைநெட்' என்ற, தனியார் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும், ஜூன், 1ம் தேதி, தென்மேற்கு பருவ மழை துவங்கும். நடப்பு ஆண்டில், அந்தமான் மற்றும் இலங்கையின் தென் பகுதியை, மே, 16ம் தேதி தென் மேற்கு பருவ மழை எட்டியது.இதனால் வழக்கத்தை விட, இரு நாட்கள் முன்னதாக, 'மே, 30ம் தேதி, கேரள கடல் பகுதியில், பருவ மழை துவங்கும்' என, கணிக்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்தபடி கேரள கடல் பகுதியை, பருவ மழை எட்டவில்லை. வழக்கமான ஜூன், 1ம் தேதி துவங்குவதும் தாமதப்பட்டு உள்ளது.தற்போதுள்ள சீதோஷண நிலை நீடித்தால், இம்மாதம், 5ம் தேதி தான், தென்மேற்கு பருவமழை துவங்கும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது.

*தமிழகத்தில் மழை:வெப்ப சலனம் காரணமாக, தமிழகத்தின் ஒரு சில இடங்களில், முன் பருவ மழை பெய்து வருகிறது. கடந்த, 48 மணி நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, திருப்பூர் மாவட்டம், அவினாசி பகுதிகளில், அதிகபட்சமாக, 7 செ.மீ., மழை பெய்துள்ளது.திண்டுக்கல், நீலகிரி, கோவை, சிவகங்கை, ஈரோடு, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தேனி மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளது. இப்பகுதிகளில், 1 செ.மீ., முதல் 5 செ.மீ., வரை மழை பெய்துள்ளது.

அடுத்த, 24 மணி நேரத்துக்கு, மழை பெய்யும் வாய்ப்பு குறித்து, சென்னை வானிலை மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:தமிழகம் மற்றும் புதுச்சேரியின், ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில், வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை அதிகபட்சமாக, 37; குறைந்தபட்சம், 29 டிகிரி செல்சியஸ்

இருக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

- நமது சிறப்பு நிருபர் -

## காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு

ஒகேனக்கல்:தமிழக மற்றும் கர்நாடக எல்லையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில், இரு நாட்களாக தொடர்ந்து மழை பெய்தது. இதனால், நேற்று அதிகாலை முதல், தமிழக எல்லையான பிலிகுண்டலுவில், காவிரியில் நீர்வரத்து அதிகரித்தது. நேற்று காலை 10:00 மணிக்கு, வினாடிக்கு, 4,000 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது.

நேற்று முன்தினத்தை விட, கூடுதலாக, வினாடிக்கு, 800 கனஅடி நீர் வந்ததாலும், காவிரி நீருடன், மழைநீரும் சேர்ந்து வந்ததால், செந்நிறத்தில், காவிரியில் தண்ணீர் கொட்டியது; இதில், சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்ந்தனர். நேற்று முன்தினம், அடைக்கப்பட்ட தொங்கு பாலத்தின் ஒருபக்க கதவின் பூட்டு, நேற்று திறந்து விடப்பட்டது. இதையடுத்து, சுற்றுலா பயணிகள், தொங்கு பாலத்தில் இருந்து, அருவியின் அழகை கண்டு ரசித்தனர்.

## பெரியாறு அணைநீர் திறப்பு

சென்னை:'பேச்சிப்பாறை மற்றும் பெரியாறு அணையில் இருந்து, பாசனத்திற்கு இன்று முதல், தண்ணீர் திறந்து விடப்படும்' என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.இந்த இரு அணைகளில் இருந்தும் இன்றுமுதல் நீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், பாசன நீர் தேவைக்காக, காத்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பயிர்களுக்கு 125 வகையான பூச்சிக்கொல்லி தமிழக வேளாண் துறை அனுமதி**

மதுரை:'தமிழக விவசாயிகளின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அனுமதிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்தை பயன்படுத்தலாம்' என வேளாண் துறை அனுமதி அளித்துள்ளது. இதற்காக 125 வகையான பூச்சிக்கொல்லி மருந்துகளின் பெயர்களையும் வெளியிட்டுள்ளது. 'தமிழகத்தில் விளைவிக்கப்படும் பயிர்களில் ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்தின் தாக்கம் இருப்பதால் காய்கறிகளில் விஷத்தன்மை அதிகரித்து, அதை உண்பதால் புற்றுநோய் அபாயம் இருக்கிறது. பயிர்களில் பூச்சிக்கொல்லி, ரசாயன உரம் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்' என தமிழக அரசுக்கு, கேரள வேளாண் துறை அதிகாரிகள் கடிதம் எழுதி உள்ளனர்.

தமிழகத்தில் இருந்து செல்லும் காய்கறிகள் பரிசோதனைக்கு பிறகே கேரளாவில் விற்க அனுமதிக்கப்படுகிறது. பல இடங்களில் தமிழக காய்கறியை புறக்கணிக்கவும் ஆரம்பித்து விட்டனர். தமிழகத்தில் பயிர் விளைவிப்பில் ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகம் பயன்படுத்துவதை தடுக்கும் பொருட்டு வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

உழவியல், ஒழுங்கு நடைமுறை, இயந்திர முறை, மரபு சார்ந்த முறை, உயிரியல் முறை, ரசாயன முறை ஆகியவற்றின் மூலம் பூச்சிக்கட்டுப்பாடு குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.எனினும் விவசாயிகளுக்கு பொருளாதார சேத மடங்கிற்கு மேல் பூச்சித் தாக்குதல் இருந்தால், பயிர்களில் பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்த வேளாண் துறை அனுமதி வழங்கியுள்ளது.

தினகரன்

## அரியலூர் சந்தையில் பலாப்பழம் விற்பனை ஜோர்

அரியலூர், : அரியலூர் சந்தையில் பலாப்பழம் விற்பனை நேற்று ஜோராக நடந்தது. முக்கனிகளில் ஒன்றான பலாப்பழம் மிகவும் சுவையுடைய பழமாகவும், கோடைக்காலத்திற்கு உகந்த பழமாகவும் விளங்குகிறது. பலாப்பழத்தின் வேர்கள் வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்துவதற்கும், இலைகள் புண்கள் மற்றும் உடலில் தோன்றும் கட்டி மற்றும் தோல் வியாதிகளை குணப்படுத்தவும் பயன்படுகிறது. மேலும், இப்பழம் குளிர்ச்சி தருபவையாகவும், மலசிக்கல், வாதபித்த சீற்றம், வயிற்று புண்ணை ஆற்றக்கூடியதாகும் உள்ளது. இந்நிலையில் அரியலூர் வாரச்சந்தையில் பல்வேறு இடங்களில் நேற்று பலாப்பழங்கள் விற்பனைக்காக குவிக்கப்பட்டு இருந்தது. மக்கள் பலாப்பழங்களை ஆர்வமுடன் வாங்கினர். இதுகுறித்து பலாப்பழ விற்பனையாளரிடம் கேட்டபோது, திருச்சியில் இருந்து அரியலூரில் வாரச்சந்தைக்கு விற்பனைக்காக வந்துள்ளோம். கேரளா, பண்ருட்டி, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய பகுதிகளில் இருந்து பலாப்பழங்கள் கொண்டு வரப்பட்டு அரியலூரில் விற்பனை செய்கிறோம். சைஸ் வாரியாக ரூ.30 முதல் 300 வரை விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்தாண்டை விட இந்தாண்டு நல்ல பழங்கள் வரத்து பெற்றுள்ளது. ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் அரியலூர் வாரச்சந்தைக்கு பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். பிற நாட்களில் மாவட்டம் வாரியாக தொடர்ந்து பல்வேறு இடங்களில் பழங்களை விற்பனை செய்கிறோம் என்றார்.

## குறுவை நெல் நாற்றங்காலில் குலைநோயை கட்டுப்படுத்துவது எப்படி?

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வட்டாரத்தில் குறுவை நாற்றங்காலில் குலைநோயை எப்படி கட்டுப்படுத்தலாம் என்று வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை நெல் மற்றும் குறுவை நாற்றங்கால் வயல்களில் ஆங்காங்கே சில இடங்களில் குலைநோய் தாக்குதல் அறிகுறிகள் காணப்பட்டது.

இதனை நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவி பேராசிரியர் மற்றும் தலைவர் பாஸ்கரன், நிலைய உதவி பேராசிரியர்கள் காமராஜ், ராஜா ரமேஷ், மருத்துவர் சரவணன் மற்றும் நீடாமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் ஆகியோர் ராயபுரம், காளாச்சேரி மற்றும் பூவனூர் கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள கோடை நெற்பயிர் மற்றும் குறுவை நெல் நாற்றங்கால் வயல்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அப்போது நிருபர்களிடம் கூறியதாவது: நாற்றின் மூலம் பரவக்கூடிய இந்த பூஞ்சாண நோயானது குதிரைவாலி மற்றும் இஞ்சிபுல் போன்ற களைகள் மூலமாக பரவும் தன்மை கொண்டது. இலையின் மேற்பரப்பில் முதலில் சிறிய பசுமை கலந்த நீல நிற புள்ளிகள் உருவாகும். இந்த புள்ளிகள் அளவில் பெரிதாகும்போது நீண்டும், பின்பு அதன் இரண்டு பக்க நுனிகளும் விரிவடைந்து நடுப்பகுதியில் அகலமாகவும், முனைகள் கூராகவும் உடைய நீண்ட கண் வடிவத்தை பெறுகிறது. இந்த கண் வடிவ புள்ளிகளின் ஓரங்கள் கரும் பழுப்பும், உட்பகுதியில் இளம்பச்சை அல்லது சாம்பல் நிறமும் கொண்டவையாக இருக்கும். தாக்குதல் அதிகமாகும் போது இலையில் காணப்படும்.

இறுதியாக இலைகள் உதிர்ந்துவிடும். மேலும் நாற்றங்காலில் குலைநோய் தாக்குதலால் நாற்றுகள் கருகி மடிந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த வயல்வெளியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணப்படும் களைகளை அழித்து மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நாற்றுகளை நடவு வயலில் நெருக்கமாக நடக்கூடாது. நெற்பயிரில் குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்த டிரை சைக்ளோசோஸ் ஏக்கருக்கு 200 கிராம் அல்லது கார்டிபன்டிடசிம் ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம் என்றனர்.

**தோட்டக்கலைத்துறை சார்பில் நாட்டு நலப்பணி திட்ட முகாம்**

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி அருகே எருமலைநாயக்கன்பட்டியில் பெரியகுளம் அரசு தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர்கள் சார்பாக என்.எஸ்.எஸ். முகாம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பாலமோகன் தலைமை வகித்தார். திருப்பூர் காவல்துறை இணை கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல் முகாமினை துவக்கி வைத்தார். மாணவர் மன்ற ஆலோசகர் ராஜாங்கம் வரவேற்று பேசினார். முகாமில் லக்னோவை சேர்ந்த தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் துணை பொது மேலாளர் இங்கர்சால், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஆண்டவர், ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் முருகன், கல்லூரி பேராசிரியர்கள் சுரேஷ், ரவீந்திரன், உடற்கல்வி இயக்குனர் பார்த்திபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் பிரபு நன்றி கூறினார்.

**சிறுபாக்கம் பகுதியில் கனமழை தடுப்பணைகள் நிரம்பின**

வேப்பூர், : கடலூர் மாவட்டம் வேப்பூர், சிறுபாக்கம் பகுதிகளில் அரசுக்கு சொந்தமான வனப்பகுதிகள் உள்ளது. இதில் மான், மயில் உள்ளிட்ட ஏராளமான வன விலங்குகள் உள்ளன. பல்வேறு வகையான மரங்களும் உள்ளது. வன விலங்குகளுக்கு தேவையான குடிநீருக்காக வனப்பகுதியில் தடுப்பணைகள், தொட்டிகள் மற்றும் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் வனப்பகுதியில் உள்ள தடுப்பணைகள், குட்டைகள் முற்றிலும் வறண்டன. இதனால் வனவிலங்குகள் குடிநீரின்றி தவிப்புக்கு உள்ளானது.

இதையடுத்து வனவிலங்குகள் குடிநீர் தேடி கிராம பகுதிக்கு வரும்போது விளை நிலங்களை நாசப்படுத்தியது. மேலும் திறந்த வெளி கிணற்றில் விழுந்து இறந்து விடும் நிலையும் ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் நேற்று நள்ளிரவில் வேப்பூர்,

சிறுபாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால் தடுப்பணைகள் மற்றும் குட்டைகள் நிரம்பின. இதையடுத்து வனவிலங்குகளுக்கு குடிநீர் பிரச்னை தீர்ந்தது.

**அவ்வப்போது குன்னூர் பகுதியில் கனமழை**

குன்னூர், : குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இந்தாண்டு எதிர்பாராத வகையில் ஜனவரி மாதம் முதல் தற்போது வரை மழை பெய்து வருகிறது. தொடர் மழையால் நீராதாரங்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன. மலைத்தோட்ட விவசாய பணியும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் நேற்று அதிகாலை வரை பெய்த கனமழையால் 30க்கு மேற்பட்ட கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்ப்டடது. இடிமின்னலுடன் கொட்டித் தீர்த்த மழையால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் ஓடியது.

மின்தடை ஏற்பட்ட கிராமங்களில் மின்கம்பிகள் மீது விழுந்துள்ள மரம் மற்றும் மரக்கிளைகள் அகற்றப்பட்டு நேற்று காலை முதல் வழக்கம் போல் மின்விநியோகம் செய்யப்பட்டது. நேற்று காலை மணி நிலவரப்படி இம்மாவட்டத்தில் பதிவான மழையின் அளவு மில்லி மீட்டரில் வருவாறு: கெத்தை 66, குன்னூர் 47.4, கிண்ணக்கொரை 20, கேத்தி 17.2, பர்லியாறு 17, குந்தா 16, கோத்தகிரி 14, அப்பர்பவானி 11, கோடநாடு 10, ஊட்டி 15.8, எமரால்டு 3 என மழை பதிவாகி உள்ளது

**விவசாயிகள் மானியம்பெற தேயிலை வாரியம் அழைப்பு**

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழிலை மேம்படுத்த தேயிலை வாரியத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் இந்தாண்டும் சிறுவிவசாயிகள் மற்றும் தேயிலை தோட்ட மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பல்வேறு வகையிலான உயர்த்தப்பட்ட மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. இதுகுறித்து தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் அம்பலவாணன்

கூறியதாவது: கம்பெனி எஸ்டேட்களில் தேயிலை மறுநடவு மற்றும் மாற்றி நடவு செய்தல் ஆகியவற்றிற்கு ஹெக்டர் ஒன்றுக்கு 2 தவணைகளில் ரூ.2 லட்சத்து 48 ஆயிரத்து 56 வழங்கப்படும். இதேபோல் தேயிலை புனரமைப்பு, கவாத்து, இடைவெளி நிரப்புதல் ஆகியவற்றிற்கு ரூ.61,138, புதியதாக தேயிலை நடவு செய்ய இரு தவணைகளில் ரூ.1,61,264 வழங்கப்படும்.

இயற்கை முறையில் தேயிலை சாகுபடி செய்ய வழக்கமான நடைமுறையை காட்டிலும் கூடுதலாக 25 சதவீத மானியமும் நீர்ப்பாசன வசதிக்கு ரூ.80 ஆயிரமும், தேயிலை சாகுபடியை எந்திரமாக்குதல் திட்டத்திற்கு 25 சதவீத மானியமும் வழங்கப்படும். சிறு தேயிலை விவசாயிகளுக்கு தேயிலை மறு நடவு மற்றும் மாற்றி நடவு செய்ய ரூ.1 லட்சத்து 93 ஆயிரத்து 517, தேயிலை புனரமைப்பு கவாத்து மற்றும் இடைவெளி நிரப்புதல் ரூ.61,138, புதியதாக தேயிலை நடவு செய்ய ரூ.161,264, இயற்கை முறையில் தேயிலை சாகுபடி செய்ய வழக்கமான நடைமுறையை காட்டிலும் கூடுதலாக 25 சதவீத மானியம், நீர்ப்பாசன வசதிக்கு எக்டேருக்கு ரூ.80 ஆயிரம் வழங்கப்படும்.

சிறுவிவசாயிகள் சங்கங்களுக்கு 50 சதவீதத்தில் வாகனம், ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.15,000 வரை சுழல்நிதி, இடுபொருள் சேமிப்பு மையம் மற்றும் அலுவலகத்திற்கு ரூ.1 லட்சம் பசுந்தேயிலை கொள்முதல் நிலையம் அமைக்க ரூ.50 ஆயிரம், பசுந்தேயிலை அளவு தராசு வாங்க ரூ.3,500 கவாத்து எந்திரம் வாங்க ரூ.40 ஆயிரம் கணினி வாங்க ரூ.40 ஆயிரம் என அனைத்து சலுகைளும் வழங்கப்படும். இதில் சம்மந்தப்பட்டவர்கள் தேயிலை வாரிய அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**நிலத்தின் வளத்தை பெருக்கிட மண்ஆய்வு செய்ய வேண்டும்**

பெரம்பலூர், : பெரம் பலூர் வட்டார வேளாண்மைத்துறை துணை இயக்குநர் சேகர் தெரிவித்திருப்பதாவது : அளவுக்கு அதிகமான ரசாயன உரத்தை பயன்படுத்துவதாலும், ஒரே சத்தை தொடர்ந்து பயன்படுத்துவதாலும் மண்ணின்வளம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே போகிறது. எனவே, மண்ணின் வளத்தை அறிய மண்மாதிரி ஆய்வு செய்வது முக்கியமாகும். மண்ணிலுள்ள தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்துக்களின் அளவை அறியவும், களர், அமில, உவர் தன்மைகளை அறிந்து தகுந்த சீர்திருத்தம் செய்யவும், தேவைக்கேற்ப உரமிட்டு உரச்செலவை குறைக்கவும், அங்கக சத்தின் அளவறிந்து நிலத்தின் நிலையான வளத்தை பெருக்கிடவும் மண்ஆய்வு செய்யவேண்டும்.

இதற்காக ஒருஏக்கரில் குறைந்தது 10இடங்களில் மண்மாதிரி எடுக்கப்பட வேண்டும். ஆங்கில எழுத்து 'ஏ" வடிவில் குழிகளை குறிப்பிட்ட ஆழத்தில் வெட்டி குழியின் இருபக்கங்களிலும் மேலிருந்துகீழ் வரை ஒரேசீராக அரைஅங்குல ஆழத்தில் மண்ணை வெட்டியெடுக்க வேண்டும். நெல், கடலை, கம்பு, மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கு 15செ.மீ ஆழத்திலும் பருத்தி, கரும்பு, வாழை, மிளகாய், மரவள்ளி போன்ற பயிர்களுக்கு 22.5செ.மீ ஆழத்திலும், தென்னை, மா மற்றும் பழத்தோட்டப் பயிர்களுக்கு 30,60, 80செ.மீ ஆழத்தில் மூன்று மண் மாதிரிகளும் எடுக்க வேண்டும். வயலில் ஒருஇடத்தில் அரைகிலோவீதம் 10இடங்களில் 5கிலோ மண்மாதிரிகள் சேகரிக்க வேண்டும். சேகரிக்கப்பட்ட மண் ணை சீராக பரப்பி நான்கு சமபாகங்களாக பிரித்து, பிறகு எதிர்எதிர் மூலையில் இருபாகங்களிலும் உள்ள மண்ணை நீக்கிவிடவும். மீண்டும் மண்ணைப் பரப்பி முன்பு செய்ததுபோல் நான்கு சமபாகங்களாகப் பிரித்து வேறு எதிர்எதிர் மூலையில் உள்ள மண்ணை நீக்கிவிடவும். இப்படி பகுத்து பிரித்து சுமார் அரை கிலோ மண்ணை

பாலித்தீன்பை அல்லது துணிப்பையில்கட்டி விபரத்தாள் இணைத்து ஆய்வுக்கு கொடுக்க வேண்டும். விபரத்தாளில் விவசாயின் பெயர், சர்வேஎண், பயிரிடப் போகும் பயிர், பயிரிடப்பட்ட பயிர்விபரம் குறிக்க வேண்டும். எரு குவித்த இடங்கள், வரப்பு ஓரங்கள், மரநிழல், வாமடைபகுதி மற்றும் நீர்கசிவு உள்ள இடங்களில் மண் மாதிரி எடுக்க கூடாது.

எனவே, மண்மாதிரி எடுக்கக் கூடாத இடங்களைத் தவிர்த்து, வயலின் நடுவில் அனைத்து இடங்களிலும் ஏக்கருக்கு 10எண்கள் வீதம் மண்மாதிரி சேகரிக்கவேண்டும். பெரம்பலூர் வட்டாரத்தில், நடமாடும் மண் ஆய் வுக்கூடம் மண்மாதிரி ஆய்வுமேற்கொள்ள வருகிற 2ம்தேதி ஈச்சங்காடு, நாரணமங்கலம், 3ம்தேதி இரூர், பாடாலூர், 4ம்தேதி நாட்டார்மங்கலம், செட்டிக்குளம், 5ம்தேதி மாவிலங்கை, கண்ணப்பாடி, 6ம்தேதி புதுஅம்மாபாளையம், டி.களத்தூர் பகுதிகளுக்கு வருகை தந்து மண்மாதிரி, நீர்மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

**குலைநோய் கட்டுப்படுத்தும் வழிமுறை**

திருவிடைமருதூர், : டெல்டா மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை நெற்பயிரில் மாறி வரும் தட்வெட்ப நிலை மற்றும் மழை காரணமாக குலைநோய் மற்றும் இலையுறை குருகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. தொடர்ந்து பெய்துவரும் மழையால் இந்தநோய் மேலும் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம். குலைநோய் நட்ட பயிரிலும் சேதம் ஏற்படுத்தும். நோயுற்ற நெற்பயிரில் இலைகளின் மேல் சிறிய பழுப்பு நிற புள்ளிகள் உண்டாகிறது. குலைநோயானது பைரிகுலேரியா என்ற பூசானத்தால் உண்டாகிறது. இந்தநோய் கிருமிகள் காற்றின் மூலமாகவும் விதைமற்றும் நோயுற்ற வைக்கோல் மூலமாகவும் பரவும் தன்மையுடையது. குலைநோய் கிருமிகள் இலைகளை மட்டுமில்லாமல் தண்டு நெற்கதிரையும்

தாக்குகின்றன நோய்ப்பூசனம் தண்டின் கணுக்களைத் தாக்கும்போது பழுப்புநிற புள்ளிகள் உண்டாகிறது. இப்புள்ளிகள் பெரிதாகும்போது கணுக்களின் திசுக்கள் அழுகி எளிதில் ஒடிந்து விடும். நோய்கதிரின் கழுத்துப் பகுதியை தாக்கும்போது பழுப்பு அல்லது கருப்பு நிற புள்ளிகள் உண்டாகின்றன.இதனால் அப்பகுதி அழுகி கதிரினை தாங்கமுடியாமல் சாய்ந்து விடும். இது கழுத்து குலைநோய் எனப்படும்.

பால்பிடிக்கும் முன் தாக்கப்பட்டால் மணிகள் பால் பிடிக்காமல் பதறாகிவிடும். இதனை தடுக்க தழைச்சத்தான யூரியாரை பிரித்து 4முறையாக மேலுரமாக பொட்டாஷ் உரத்துடன் சேர்த்து இடவேண்டும். வயலின் நீரை நன்றாக வடிகட்டி தேவைகேற்ப பூசானகொல்லி மருந்துகளான கார்பென்டாசிம் 200கிராம் அல்லது அசாக்ஸிஸ்டோபின்200 மற்றும் டிரைசைக்ளசோல் ஆகியவற்றினுள் ஏதாவது ஒன்றினை ஏக்கர் 1க்கு 200லிட்டர் தண்ணீரில் நோய் தென்பட்டவுடன் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் 15நாட்கள் கழித்து மறுமுறை தெளிக்கவும்.இலையுறை கருகல் நோய் தாக்கப்பட்டால் தூர்கள் அதிகமாக வெளிவந்த பின்னரும் தொண்டை கதிர் பருவதிலும் நெற்பயிரில் அதிகாமாக இந்நோய் தாக்குகிறது. முதலில் இந்த நோய் தண்ணீர் மட்டத்திற்கு மேல் உள்ள தண்டுபாகத்தின் இலையுறையில் புள்ளிகளை உண்டாக்குகிறது. இப்புள்ளிகள் தொடக்கத்தில் பச்சை கலந்த சாம்பல் நிறமாக முட்டை வடிவத்தில் அல்லது நீள் உருளை வடிவமாக சுமார் 1செ.மீ நீளத்தில் காணப்படும். பயிரின் அடிப்பகுதியில் உள்ள இலையுறைகளில் நோய்தாக்குதல் காணப்படும்.

இது தண்டு பகுதியையும் அடைந்து தாக்கும். இதை கட்டுப்படுத்த ஏக்கர் 1க்கு 200மில்லி புரோப்பிகோனோசோல் அல்லது 200கிராம் கார்பண்டாசிம் பூசானகொல்லிகளில் ஏதாவது ஒன்றினை ஒரு ஏக்கருக்கு தேவையான 200லிட்டர் தண்ணீரில் கலந்து இலைகள் மற்றும் தூர் பாகங்கள் நனையுமாறு தெளிப்பதன் மூலம் நோயின் அளவை

கட்டுப்படுத்தலாம். என தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் மாநில திட்டக்குழு துணை தலைவர் பேச்சு**



வேளாண்மை வளர்ச்சி திட்டங்கள் குறித்த தகவல்களை அதிகாரிகள் விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்த ஷீலாநாயர் கூறி னார்.

வளர்ச்சி பணிகள் ஆய்வு

திருவாரூர் வருகை தந்த மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலாநாயர் மாவட்டத்தில் வேளாண்மை துறை உள்பட பல்வேறு துறை களின் சார்பில் நடைபெறும் வளர்ச்சி திட்ட பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதையடுத்து கொர டாச்சேரி அருகே உள்ள மணக்கால் கொத்தங்குடி கிராமத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியில் இருந்து வேளாண்மை துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள

ஒருங்கிணைந்த விவசாய பண்ணைக்கு சென்ற திட்டக்குழு துணை தலைவர் அங்கு நடைபெற்று வரும் ஆடு, கோழி வளர்ப்பு பணி, எந்திரம் மூலம் தீவன புல் அறுக்கும் பணிகளை பார்வை யிட்டார். பின்னர் துறை வாரியாக அமைக்கப்பட்டி ருந்த கண்காட்சி அரங்கையும் அவர் பார்வையிட்டார்.

கலந்தாய்வு கூட்டம்

ஆய்வு பணியை தொடர்ந்து திருவாரூர் வேளாண்மை இணை இயக்குனர் அலுவ லகத்தில் அனைத்து துறை அதிகாரிகளுடனான கலந் தாய்வு கூட்டம் நடைபெற்றது. இதில் புதிய வளர்ச்சி திட்டங் களை செயல்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட கலெக் டர் மதிவாணன் முன்னிலை வகித்தார். கூட்டத்துக்கு மாநில திட்டக்குழு துணை தலைவர் சாந்தஷீலாநாயர் தலைமை தாங்கி, புதிய திட் டங்கள் குறித்து விளக்கி பேசி னார். அப்போது அவர் கூறியதா வது:-

ஒருங்கிணைந்த பண்ணையம்

வேளாண்மை துறை மூலம் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்த வளர்ச்சி திட்டங்கள் குறித்த தகவல்களை விவசாயிகளுக்கு அதிகாரிகள் தெரியப்படுத்த வேண்டும்.இதற்காக அதிகாரிகள் முழு முனைப்புடன் செயல்பட வேண்டும். வேளாண்மை துறை சார்பில் தற்போது ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. இவ்வாறு அமைக்கப்படும் பண்ணைகள் மூலம் விவசாயத்துடன் ஆடு, கோழி வளர்த்தல் தொழில்களையும் ஒரே நேரத்தில் செய்து லாபம் ஈட்டலாம். எனவே இந்த திட் டத்தை விவசாயிகள் முழுமை யாக பயன்படுத்தி கொள்ள வேண்டும். மக்களின் பொரு ளாதாரத்தை உயர்த்துவதற் காக அறிவிக்கப்படும் அரசு திட்டங்களின் விவரங்களை விவசாயிகளிடம் முழுமையாக கொண்டு சேர்ப்பது நல்ல பயன்களை தரும். இவ்வாறு அவர் கூறி னார்.

கூட்டத்தில் மாநில திட்டக் குழு கூடுதல் இயக்குனர் செல்வராஜ், வேளாண்மை கூடுதல் இயக்குனர் சங்கர லிங்கம், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர் ஸ்ரீலேகாதமிழ்ச்செல்வன், மாவட்ட திட்டமிடல் இயக்கு னர் மாதவன், வேளாண்மை துணை இயக்குனர்

மதியழகன், மாவட்ட கலெக்டரின் நேர் முக உதவியாளர் பெரியகருப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**4 லட்சத்து 72 ஆயிரம் டன் நெல் கொள்முதல் கலெக்டர் தகவல்**




திருவாரூர் மாவட்டத்தில் 4 லட்சத்து 72 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் மதிவாணன் கூறினார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-
குறுவை சாகுபடி இலக்கு திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 33 ஆயிரத்து 500 எக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இதில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 532 எக்டேரிலும், இயல்பான நடவு முறையில் 325 எக்டேரிலும், நேரடி நெல் விதைப்பு முறையில் 121 எக்டேரிலும் என மொத்தம் 978 எக்டேரில் குறுவை சாகுபடி நடந்து இருக்கிறது.
விதை-உரம் வினியோகம்
குறுவை சாகுபடிக்காக நெல் விதை 2 ஆயிரத்து 525 டன் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. உளுந்து விதை 14 டன் இருப்பு உள்ளது. வேளாண்மை துறை மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள்

மூலம் 556 டன் நெல் விதை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு உள்ளது. கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் ஆயிரத்து 992 டன் யூரியா, ஆயிரத்து 63 டன் டி.ஏ.பி., 384 டன் பொட்டாஷ் உரம் வினியோகம் செய்யப்பட்டு உள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாத இறுதி வார நிலவரப்படி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 4 லட்சத்து 72 ஆயிரத்து 351 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கலெக்டர் கூறி உள்ளார்.